பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 11 வெள்ளிக்கிழமை 24.05.2024 கதிர் 198

## வடக்குக்கு இன்று வருகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக இன்று வெள்ளிக்கிழமை வடக்கிற்கு வருகை தருகின்றார். 3 நாட்கள் பயணமாக வடக்குக்கு வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் 'உரித்து' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் காணி உரிமங்களை வழங்கிவைக்கவுள்ளார்.

வடக்கு இளைஞர்களுடனான விசேட சந்திப்பொன்றிலும் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்திற்காக யாழ்போதனா வைத்தியசாலையுடன் இணைத்து அமைக்கப்பட்ட பயிற்சி மற்றும் ஆய்வுப் பிரிவையும் ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார். இதேவேளை கிளிநொச்சி வைத்தியசாலையில் பெண்கள் சுகாதாரப் பிரிவொன்றும் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்படவுள்ளது.

வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் இதய நோய் பிரிவும், மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் புதிய விடுதியொன்றும் ஜனாதிபதியால் ☞ 2

## உலகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தேரவாத பௌத்தத்தில் தீர்வுகளுண்டாம்

### ஜனாதிபதி ரணிலின் கண்டுபிடிப்பு இது

விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்துடன் வேகமாக முன்னேறும் உலகம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தேரவாத பௌத்தத்தில் தீர்வு இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மாத்தளை தர்மராஜா பிரிவேனா விகாரையில் நேற்று நடைபெற்ற அரச வெசாக் விழாவில் இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் ஊடாக கலந்துகொண்டு உரை ☞ 8

## ரஷ்யா, மியான்மரில் சிக்கியோரை மீட்பதில் ஐ.ம.ச. தீவிர ஆலோசனை

மியன்மார், ரஷ்யா போன்ற நாடுகளில் கட்டாயத்தின் பேரில் போர், பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தி ஆலோசனை நடத்தவுள்ளது.

தகவல் தொழில்நுட்பத்துறையில் உயர்மட்ட வேலைவாய்ப்புகள் வழங்குவதாக ஏமாற்றப்பட்டு, மியன்மாருக்கு அழைத்துச் செல்லப்பட்டதன் பின்னர், மியன்மாரில் பயங்கரவாதத்தின் பிடியில் சிக்கியுள்ள இளைஞர்கள் மற்றும் அதிக சம்பளம் தருவதாக ஏமாற்றி, ரஷ்யாவுக்கு அழைத்துச்செல்லப்பட்டு ரஷ்ய - உக்ரேனிய போரில் கட்டாயத்தின் பேரில் தள்ளப்பட்ட ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரைக் களமிறக்குவது என்கிற திட்டத்திலிருந்து தமிழ்த் தேசியப் பேசும் பெரிய கட்சிகள் எல்லாம் விலகிக்கொண்டதை அடுத்து அல்லது அவை எல்லாம் கழுவுகிற மீனில் நழுவுகிற மீன்களாக நடந்துகொள்வதை அடுத்து, ஆதரவு தரக்கூடிய சிறிய கட்சிகளுடன் வடக்கு கிழக்கு சிவில் சமூகங்களின் கூட்டிணைவு என்கிற அமைப்பு சார்பில் சிலர் தொடர்ந்தும் பேசி வருகின்றார்கள். தாம் முன்னெடுத்த யோசனையை எப்படியும் செயற்படுத்தியாக வேண்டும் என்கிற முனைப்பில் இருக்கின்ற அவர்கள் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரனுடனும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசனுடனும் சந்தித்துப் பேசி இருக்கிறார்கள்.

அவர்கள் இருவருமே தொடர்ந்தும் பொது வேட்பாளருக்குத் தமது ஆதரவைத் தெரிவித்திருக்கிறார்கள். ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் என்கிற பெயரில் கட்சி ஒன்றை வைத்துக்கொண்டிருக்கும் அனந்தி சசிதரனும் இது விடயத்தில் ☞ 2

## 33,960 பேர் மழையினால் கடும் பாதிப்பு

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையால் 8,944 குடும்பங்களைச் சேர்ந்த 33,960 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடும் காற்று மற்றும் மரம் முறிந்து வீழ்ந்த சம்பவங்களால் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அறிக்கைக்கு அமைய மேல் மாகாணத்திலேயே அதிக பாதிப்புகள் பதிவாகியுள்ளன. இதன்படி மேல் மாகாணத்தில் 4,814 குடும்பங்களைச் சேர்ந்த 19,527 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றுள்ளது.

### ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால்

# பொறுப்புக்கூறலிற்கான ஆணை புதுப்பிக்கப்படுவது மிக அவசியம்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

**இலங்கையின் பொறுப்புக் கூறல் செயற்திட்டத்திற்கான ஆணையை செப்டம்பர் அமர்வில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை புதுப்பிப்பது மிகவும் அவசியம் என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.**

**சர்வதேச மனித உரிமை** ☞ 2

## ராஜபக்ச குடும்பத்தின் தேவைப்படியே எந்தத் தேர்தல் முதலில் என்கிற முடிவு

### குத்திக்காட்டுகிறார் ஹக்கீம்

ராஜபக்ச குடும்பத்தினரது தீர்மானத்திற்கு அமையவே எந்தத் தேர்தல் முதலில் நடக்கும் என்பது முடிவாகும் என்று சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மாத்தளையில் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்ச குடும்பத்தினர் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு எந்தத் தேர்தல் சிறந்தது என்ற தீர்மானிக்கின்றார்களோ அதனைப் பொறுத்துதான் ஜனாதிபதி தேர்தல் நடைபெறுமா இல்லை நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறுமா என்பது தீர்மானிக்கப்படும் என்றே தெரிகிறது.

தங்களுடைய அரசியல் கட்சியைப் பாதுகாத்துக்கொள்வதற்காக அன்றி நாட்டில் உண்மையான மாற்றமொன்று நடைபெறுவதற்காக தேசிய ☞ 2

## நாடாளுமன்றைக் கலைப்பதற்கு 113 உறுப்பினர் ஆதரவு இல்லை

### அதனால் ஜனாதிபதித் தேர்தலே முதலில் என்கிறார் கம்மன்பில

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்குத் தேவையான 113 உறுப்பினர்களின் ஆதரவை பொதுஜன பெரமுனவால் பெறமுடியாது போய்விட்டதன் காரணமாக, ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடக்கும் என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கோட்டேயில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடத்தப்படும் என ஜனாதிபதி மீண்டும் உறுதிப்படுத்தி ☞ 2

## முதலில் ஜனாதிபதி தேர்தல் உறுதிப்படுத்தினார் ரணில்

### அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்

அரசமைப்பிற்கமைய ஜனாதிபதித் தேர்தலே முதலில் இடம்பெறும். வரவு - செலவு திட்டத்திலும் அதற்கான நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே தேர்தல் விவகாரத்தில் எவ்வித குழப்பங்களையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் தெளிவாக அறிவித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும், அமைச்சருமான கலாநிதி.பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நேற்று (நேற்று முன்தினம்) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் போது வழமையான அமைச்சரவை யோசனைகள் முன்வைக்கப்பட்டு, அவை தொடர்பான கலந்துரையாடல்கள் நிறைவடைந்த பின்னர் தேர்தல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

வரவு - செலவு ☞ 2

## பொருந்தோட்ட தொழிலாளர் சம்பளத்திற்கான வர்த்தமானி

### 1700 ரூபாய் சம்பளத்தை உறுதிப்படுத்தி வெளியானது

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பான புதிய அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானியில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1350 ரூபா வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

நாளாந்த விசேட கொடுப்பனவாக 350 ரூபா வழங்கப்படவுள்ளதுடன், நாளாந்த மொத்த கொடுப்பனவாக 1700 ரூபா வழங்கப்படவுள்ளதாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக கொழுந்து கிலோகிராம் ஒன்றுக்கு 80 ரூபா வீதம் வழங்கப்பட வேண்டுமென தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ☞ 2

## பொருந்தோட்டப் பகுதி மக்களிடையே உணவுப் பாதுகாப்பின்மை அதிகரிப்பு

இலங்கையின் பெருந்தோட்ட பகுதிகளில் உணவு பாதுகாப்பின்மை அதிகரித்துள்ளதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

உலக உணவுத் திட்டம் தனது 2023 ஆண்டுக்கான வீட்டு உணவுப் பாதுகாப்பு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையை மாதிரிக் குடும்பங்களின் அடிப்படையில் வெளியிட்டுள்ளது. குறித்த அறிக்கையில்,

கடந்த ஆண்டில் 24 சதவீத ☞ 8

## உ மின்சேமிப்பு திட்டத்திற்கு அமைச்சரவை வழங்கியது அனுமதி

நீண்டகால மின்சக்தி விரிவாக்கத் திட்டத்தின் கீழ் மின்கல மின்சக்தி சேமிப்புத் தொகுதி கொள்ளவுகளை நடைமுறைப்படுத் துவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

2030 ஆண்டாகும் போது எமது நாட்டின் மின்சக்தித் தேவையின் 70 சதவீதமான மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்தி வளங்களிலிருந்து பூர்த்தி செய்கின்ற இலக்கை அடைவதற்காக 2024-2030 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் கருத்திட்டங்கள் ☞ 2

## இனி இது .....

ஆதரவு தெரிவிக்கிறார். இந்த மூவர் அணியும் மாகாண சபையில் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தவர்கள். என்றாலும் பின்னாள்களில் விக்னேஸ்வரன் சாதியத்தை முதன்மைப்படுத்திச் செயற்படுகின்றார் என்பதில் அவருக்கும் ஐங்கரநேசனுக்கும் இடையில்கருத்துமுரண்பாடுகளும் ஏற்பட்டன. இப்போது அவர்கள் இருவரும்பொதுவேட்பாளர்சார்பில் ஒரே அணிக்குள் வருவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

எப்படியிருந்தாலும் பொது வேட்பாளர்தொடர்பில்தொடக்கத்தில் இருந்த கொஞ்சநஞ்சப் பரபரப்பும் அடங்கிப்போய்விட்டது. இப்போது, தாமாத் தூக்கித் தமது தோளில் வைத்துக்கொண்ட தமிழ் பொது வேட்பாளர்விடயத்தைஎப்படியாவது ஒப்பேற்றியாகவேண்டும் என்கிற வீம்புடன் அது சார்ந்தவர்கள் முன்னேறுவதாகத்தான் தெரிகிறது. மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்கக்கூடாது என்று சும்மாவா சொன்னார்கள். முன்னதாக இந்த விடயத்தில் தாம் நம்பிய பலதும் மண் குதிரைகள்தான் என்பது அவர்களுக்கு இப்போது நன்றாகப் புரிந்திருக்கும்.

கூட்டிணைவினர்தமிழ்ப்பொது வேட்பாளரைத் தமது கைகளில் பொறுப்பெடுத்ததும், அது தமிழ்த் தேசியத்தை வடக்கு கிழக்கில் ஒருங்கிணைப்பதற்கான. தேசக் கட்டுமானத்தை மீளுருவாக்கம் செய்வதற்கானமுயற்சிஇதுவென்று அறிவித்தார்கள். தமிழ் மக்களின் இறைமை தாயகம் என்கிற கோட்பாடுகளுக்குஅமையமீண்டும் ஒரு தேசியக் கட்டுமானத்தைச் செய்வதே, ஒருங்கிணைப்பதே தமது நோக்கம்என்றார்கள். அதற்கு அரசியல் கட்சிகளையும்தம்மோடு சேர்த்துக்கொண்டு பயணித்தால் இலக்குஇலகுவானதுஎன்றுஅவர்கள் போட்ட திட்டம் பிசுபிசுத்துவிட்டது. அதனால், அவர்கள் தாங்களாகவே தமது திட்டத்தைச் செயற்படுத்தவேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

இதனைப் பேசுபவர்கள் அந்தத் திட்டத்தைச் செயற்படுத்துகின்ற அளவிற்கு பண பலமோ, அரசியல் பலமோ கொண்டவர்கள் அல்லர். ஏப். 3-0வவுனியாவில்நடத்தப்பட்ட இந்தக் கூட்டிணைவின் முதல் கூட்டத்திற்கான செலவை ஈடுசெய் வதற்கே அங்கு வந்திருந் தவர்களிடம் பணம் வசூலிக்க வேண்டிய அளவிற்கே அவர்க ளின் நிதி நிலமை இருந்தது. ஏனெனில் இந்தத் திட்டத்திற்கு முனைப்புக் காட்டுபவர்களில் பலர் அல்லது அனைவரும் கருத்துருவாக்கிகள் என்கிற வகையில் முக்கியமானவர்களே தவிர,கட்டமைப்புரீதியில்தலைமைத் துவத்தைவழங்கும்அனுபவத்தைக் கொண்டவர்கள் அல்லர். அப்படியிருக்கும்போது இதுபோன்ற ஒரு பரந்த செயற்றிட்டத்தைப் பெரும் ஆரவாரத்தோடு குறுகிய காலத்திற்குள் நிறைவேற்றுவது என்பது அவர்களுக்கு மிகப் பெரிய சவால் மிக்க பணியே. பணத்திற்காகவோ வேறு காரணங்களுக்காகவோ அவர்கள் தனிநபர்களை அணுகும்போது அந்தத் தரப்பினர் இவர்களைத் தங்கள் நலன்களுக்குப் பயன்படுத்திக்கொள்ளப்பார்ப்பார்கள் என்கிறஆபத்தும்இருப்பதால்அதுவும் மிகச் சிக்கலான காரியங்களில் ஒன்றாகவே இருக்கும்.

அத்தோடு தமக்கு ஆதரவளிக் காதவர்களை, சதிக் கோட்பா டுகள் ஊடாக ஒதுக்கியும் எதிர்ப்புணர்வோடும் இவர்கள் அணுகுவதால் இந்தப் பொது வேட்பாளர் திட்டத்திலிருந்து விலகி நிற்கக்கூடிய அரசியல் தரப்புக்கள் தேர்தல் நெருங்க நெருங்க இவர்களை ஒரு அரசியல் எதிரிகளாகக் கொண்டு காய் நகர்த்துவதற்கான வாய்ப்புக்களும் அதிகம் உண்டு. அதற்கேற்ற வகையிலேயே இவர்களும் செயற்படுகின்றனர் என்பதால், அதாவது தமது பலத்தால் அல்லது தமக்கான மக்கள் ஆதரவால் அரசியல் கட்சிகளை வழிப்படுத்த -முடியும் அல்லது அரசியல் கட்சிகளுக்கு ஒரு பாடம் படிப்பிக்க முடியும்என்றுஇவர்கள்கருதுவதால் தமிழர்களிடம் மோதல் மற்றும் பிளவுகளை ஏற்படுத்துவதைத் தாண்டி இவர்கள் கூறும் ஒற்றுமையை இவர்களாலேயே ஏற்படுத்த முடியுமா என்கிற கேள்வியும் எழுப்பப்படுகின்றது.

அரசியல் கட்சிகளைத் தாண்டிப் பயணிப்பது என்று அவர்கள் எடுத்திருக்கக்கூடிய பாதை சரியானதாக இருக்கலாம். ஆனால் அரசியல் விரோதத்தைச் சம்பாதித்துக்கொண்டு இலக்கை அடைய முடியும் என்று அவர்கள் நினைப்பார்களானால் அது இலக்கை அடையும் பாதையாக இருக்கப்போவதில்லை என்பதே வரலாறு சொல்லித்தரும் பாடம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வடக்குக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திறந்து வைக்கப்படவுள்ளது. இவை தவிர யாழ்ப்பாணத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்விலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

இவ்வாறு10முக்கியநிகழ்வுகளில் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார். அது மாத்திரமின்றி வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் இவ்விஜயத்தின் போது விசேட அவதானம் செலுத்தப்படவுள்ளது. எவ்வாறிருப்பினும் அரசியல் ரீதியான சந்திப்புக்கள் எவையும் திட்டமிடப்படவில்லை எனத் தெரியவருகிறது.

## பொருந்தோட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் செயலாளர் ஆர்.பி.ஏ. விமலவீரவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளவர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய சம்பளத்தை வழங்க மறுக்கும் பெருந்தோட்ட நிறுவனங்களின் காணிகுத்தகைஉடன்படிக்கையை இரத்து செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதனடிப்படையில், தோட்டத் தொழிலாளர்களுக்கான நாள் சம்பள அதிகரிப்பை அரசு அறிவித்திருப்பினும், ஒருசில தோட்டக்கம்பனிகள் குறித்தசம்பள அதிகரிப்பை வழங்க முடியாதென அரசுக்கு முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளன. குறித்த நிலைமையைக்கருத்தில்கொண்டு கீழ்க்காணும் படிமுறைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

- நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் அவர்களால் சமகால வாழ்க்கைச் செலவு மற்றும் அண்மையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளின் விளைவுகளைக்கருத்தில்கொண்டு தோட்டத்தொழிலாளர்ஒருவருக்குச் செலுத்த வேண்டிய குறைந்தபட்ச சம்பளத்தை மதிப்பீடு செய்தல்
- அவ்வாறுமதிப்பீடுசெய்யப்படும் சம்பளத்தைச் செலுத்துவது தொடர்பாக ஒவ்வொரு தோட்டக் கம்பனிகளிடம் காணப்படுகின்ற இயலுமைகளை பரிசீலிப்பதற்குக் குழுவொன்றை நியமித்தல்
- அத்துடன், ஏதேனுமொரு தோட்டக் கம்பனி முறைகேடான முகாமைத்துவத்தால் சம்பளம் செலுத்துவதற்கு தவறினால், அவ்வாறான தோட்டக் கம்பனிகளுடனான காணிக் குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதற்கு இயலுமாகும் வகையில் சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கான படிமுறைகளை மேற்கொள்ளல்.

## ராஜபக்ச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் ஏதாவது ஒன்று நடந்தாக வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றால் தங்களுக்கு வெற்றிவாய்ப்பில்லை என்பதை ஜே.வி.பி.யும், ஜனாதிபதியின் பொதுஜனபெரமுனவினரும் தெளிவாகப்புரிந்துகொண்டுள்ளார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது என்றார்

## பொறுப்புக்கூற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிப்பகத்தின் ஆசிய பசுபிக் இயக்குநர் எலைன்பியர்சன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மே 18 2009இல் முடிவடைந்த இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது பலவந்தமாக காணாமல்போகச்செய்யப்பட்டோர் குறித்த விவகாரத்திற்கு தீர்வைக் காண்பதற்காக சர்வதேச விசாரணைகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கூறல்நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்

இலங்கையின் உள்நாட்டுப் போரின்போது தங்கள் படையினர் இழைத்த அநீதிகளை இலங்கை ஆளும் தரப்புத் தொடர்ந்தும் மறுத்துவருகின்றது. இதன் காரணமாக, உண்மை நீதி இழப்பீடு போன்றவற்றை வழங்குவதற்கு பதில் இலங்கை ஆளும் தரப்பு பாதிக்கப்பட்டவர்களையும் அவர்களின் சமூகத்தினரையும் மௌனமாக்க முயல்கின்றது. பாதிக்கப்பட்ட மக்களிற்கு நிவாரணம் வழங்குவதற்கும்துஸ்பிரயோகங்கள் நிகழாமல் தடுப்பதற்கும் மேலும் சர்வதேச நடவடிக்கைகள் அவசியம் என்பது புலனாகின்றது.

மே 18ஆம்திகதிநினைவேந்தல் தினத்திற்குமுன்னர்வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளை இலங்கை பொலிஸார் குழப்ப முயன்றனர் போரின்போது நிலவிய பட்டினி நிலையை குறிக்கும் விதத்தில் வழங்கப்படும் கஞ்சியை தயாரித்து விநியோகித்தமைக்காக நால்வரை கைதுசெய்து ஒருவாரம் தடுத்துவைத்திருந்தனர்.

காணாமல்போனவர்களின் உறவினர்கள் சிலரும் ஏனையவர்களும் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொள்வதைத்தடைசெய்யும் விதத்தில் அதிகாரிகள் நீதிமன்ற உத்தரவுகளைப் பெற்றிருந்தனர்.

சில இடங்களில் பொலிஸார் தலையிட்டுநிகழ்வுகளைத்தடுத்தனர் அல்லது மக்கள் அங்கு செல்வதை தடுத்தனர்.

ஐக்கிய நாடுகளின் புதிய அறிக்கையில்முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை இலங்கை அரசு உடனடியாக நடைமுறைப் படுத்தவேண்டும்.ஐ.நா.அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள படி வலிந்து காணாமலாக்கப்பட்டமை இலங்கையில் இடம்பெற்றது என்பதையும் அதன் அளவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் உடனடி நம்பகதன்மைமிக்க விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். பெரும்மனிதப்புதைகுழிகளைத் தோண்டுவதற்கு சர்வதேச தொழில்நுட்ப உதவியைப்பெற்றுக் கொள்ளவேண்டும்.

இலங்கை ஆளும்தரப்பு ஒரு சுதந்திரமான வழக்குரைஞர் அதிகாரத்தை ஏற்படுத்த வேண்டும் பயங்கரவாதத் தடைச்சட்டம் உட்பட துஷ்பிரயோகங்களிற்குவழிவகுக்கும் அனைத்துச் சட்டங்களையும் நீக்கவேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையர் அலுவலகம் முன்வைத்துள்ள பரிந்துரைகளை வெளிநாட்டு அரசுகளும் ஐக்கிய நாடுகள் அமைப்புகளும்நடைமுறைப்படுத்த வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களிற்கு கடும் வேதனையை துன்பத்தை ஏற்படுத்தும் வலிந்து காணாமலாக்கப்பட்ட வரலாற்றை இலங்கை கொண்டுள்ளது. இது நாட்டில் மேலும்துஸ்பிரயோகங்கள்நிகழும் ஆபத்தை ஏற்படுத்துகின்றது.

இலங்கையின்பொறுப்புக்கூறல் செயற்திட்டத்திற்கான ஆணையை செப்டம்பர் அமர்வில் ஐக்கிய நாடுகள்மனிதஉரிமைகள்பேரவை புதுப்பிப்பது மிகவும் அவசியம். அந்த குற்றங்களிற்கு காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கு உலகெங்கிலும் உள்ள வழக்குரைஞர்கள் இந்த ஆதாரங்களை பயன்படுத்துவது அவசியம் என்றார்.

## நாடாளுமன்றைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளார். ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்தினால் அது ஜனாதிபதிக்கும், நாட்டுக்கும் பாதகமாக அமையும்.

ஜனாதிபதிதேர்தலுக்குமுன்னர் பொதுத்தேர்தலை நடத்துமாறு பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ச தொடர்ந்து வலியுறுத்தியபோது 113 உறுப்பினர்களின்ஆதரவைகையெழுத்துக்கள் ஊடாக உறுதிப்படுத்திக் கொண்டு வாருங்கள் நாடாளுமன்றத்தை கலைக்கலாம் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு 113 உறுப்பினர்களின் ஆதரவை பெறுவதற்கு பஸில் ராஜபக்ச எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன. பொது ஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதி பக்கம் ஆகவே அந்த கட்சியின் தலைவர் யார் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பொதுவேட்பாளராக களமிறக்குமாறு பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ராஜபசக்களிடம் வலியுறுத்தியுள்ளார்கள். பொது ஜன பெரமுனவின் ஆதரவுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களாணையுடன் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பண்டாரநாயக்க குடும்பத்துக்கு ஏற்பட்ட அரசியல் நிலைமைதமக்கும்ஏற்படுமோஎன ராஜபக்சக்கள் அச்சமடைகிறார்கள்.

நாட்டு மக்கள் தம் பக்கம் என்று நினைத்துக்கொண்டுள்ளபொதுஜன பெரமுனவுக்கு இந்த ஆண்டு இடம்பெறவுள்ள தேர்தல் தகுந்த பாடத்தைக் கற்பிக்கும். அவர்களின் வேட்பாளர் யார் என்பதை நாங்களும் எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

## மின்கல....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் உற்பத்தி செய்யப்படும் மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்தி கொள்ளளவுகளைதேசியமின்வலுக் கட்டமைப்புக்கு இணைப்புச் செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது.

நாட்டில் காணப்படுகின்ற காற்றாலை மற்றும் சூரிய மின்கல ஆற்றல் வளங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசு விசேட கவனம் செலுத்தியுள்ளதுடன், மாறுபடுகின்ற இயல்புகளுடன் கூடிய குறித்த வலுசக்தியை மின்வலுக் கட்டமைப்புக்கு இணைத்துக் கொள்வதைப் படிப்படியாக அதிகரிக்கும் போது, மின்வலு கட்டமைப்பின்நம்பகத்தன்மையை பேணிச் செல்வதற்காக மிகவும் நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய மின்வலுக் கட்டமைப்பு இருத்தல் அவசியமாகும்.

அதற்குப் பொருத்தமான ஒரு முறையாக நீண்டகால மின்சக்தி விரிவாக்கத்திட்டத்தின் கீழ் மின்கல வலுசக்தி சேமிப்புத் தொகுதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த பொறிமுறையை 2024 தொடக்கம் 2030 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பயன்படுத்துதல் பற்றிய ஆய்வுக் கற்கைகளை மேற்கொண்டு விதந்துரைகளைச்சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில் தனியார் முதலீடுகள் அல்லது அரச - தனியார் பங்குடமையின் கீழ் அல்லது தேசிய மின்வலுக் கட்டமைப்புடன் இணைப்புச் செய்வதற்காக அடையாளம் காணப்பட்டுள்ள மின்கல கொள்ளளவுகளை அபிவிருத்தி செய்வதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## ரஷ்யா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையர்களை மீட்டு, அவர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் ஆராய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் வழிகாட்டுதலின் பேரில், ஐக்கிய மக்கள் சக்தியின் மூன்று பிரதிநிதிகளை அந்நாடுகளுக்கு அனுப்பிவைக்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெ.சி. அலவத்துவல, கே.சுஜித் சஞ்சய பெரேரா, வசந்த யாப்பா பண்டார ஆகியோர் மியன்மார் மற்றும் ரஷ்யாவுக்கு புறப்பட்டுச் சென்று, எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய மக்கள் சக்தி, அந்த இலங்கையர்களை மீட்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயவுள்ளது.

## முதலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தில்ஜனாதிபதித்தேர்தலுக்கான நிதி மாத்திரமே ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே அந்த நிதியில் வேறு எந்த தேர்தலையும் நடத்த முடியாது. அரசியலமைப்பின் பிரகாரமும் ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்பட வேண்டும்.

அந்தப் பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். எனவே ஜூன் மாதம் பாராளுமன்றம் கலைக்கப்படும் என பரவும் கற்பனை செய்திகளால் குழப்பமடைய வேண்டாம் என்று ஜனாதிபதி அமைச்சரவையில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டு ஒப்பந்தத்துக்கமைய தேசிய கடன் மறுசீரமைப்பைப் போன்று சர்வதேச கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளையும்நிறைவுசெய்ய வேண்டியதேவை அரசாங்கத்துக்கு காணப்படுகிறது.

இதில்காணப்படும்இழுபறியால் நாணய நிதியத்தின் மூன்றாம் கட்ட கடன் தொகையையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. இதனை நிறைவு செய்வதற்கு நிலையான ஆட்சி நாட்டில் காணப்பட வேண்டும்

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர் Kalaikkathir

# தூய்மையான அரசியலுக்காக ஒன்றிணைவோம் மார்ச் 12 இயக்கத்தின் ஏற்பாட்டில் கலந்தாய்வு

## கிளிநொச்சியில் நடந்தது







தூய்மையான அரசியலுக்காக ஒன்றிணைவோம் என்ற தொனிப்பொருளில் மார்ச் 12 இயக்கத்தின் கிளிநொச்சி மாவட்டத்தினரின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை மக்கள் கலந்துரையாடல் ஒன்று தனியார் விருந்தகம் ஒன்றில் நடைபெற்றது.



மேற்படி கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச்செயலாளர் உமாச்சந்திரா பிரகாஸ் உள்ளிட்ட



அரசியல் கட்சிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

தூய்மையான அரசியல் கலாசாரத்தை எவ்வாறு உருவாக்குவது தொடர்பாக அரசியல் பிரதிநிதிகள் மற்றும் சிவில் அமைப்புக்களின் கருத்துக்கள் பெறப்பட்டு கலந்துரையாடலாக முன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்து குறித்த கலந்துரையாடலை முன்னெடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

அரசியல் கட்சிகள் சார்பாக கருத்துக்கள் முன்வைக்கப் பட்டன..

ஆனந்த சங்கரி கருத்;துத் தெரிவிக்கையில், இந்த நாட்டில் எமக்குள்ள பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதில்லை ஊடகங்கள் சரியாக செயற்படுவதில்லை என்றார்.

உமாச்சந்திரா பிரகாஸ் கருத்துத் தெரிவிக்கையில் -

எந்தவொரு கட்சியும் மக்கள் நலத்துடன் தான் செயற்படுகிறது. எமது கட்சியும் இலங்கையராக வாழும் சூழலை உருவாக்கி வருகிறது. பெண்களுக்கு மாகாண சபைகளிலோ நாடாளுமன்றில் இட ஒதுக்கீடு கிடைப்பதில்லை. - என்றார்.

சிறிதரன் எம்.பி. தெரிவிக்கையில் -

நாடாளுமன்றத்திலே பெண்களுக்கு 25வீத இட ஒதுக்கீடு என்று சட்டம் ஆக்கியிருந்தால் பாராளுமன்றில் அதிகளவு பெண்கள் இருந்திருப்பார்கள், உள்ளூராட்சி மன்றத்தில் மாத்திரம் உருவாக்கியிருக்கிறார்கள்.

தமிழரசுக்கட்சி சமஸ்டி கொள்கையை முன்வைத்து தனது பயணத்தை மேற்கொள்கிறது.

சந்திரிக்காவுக்கு தமிழர்கள் வாக்களித்த போது தமிழர் மீது படுகொலையை நிகழ்த்தினார்.

இலங்கையில் பல இனப்படுகொலை நடந்தது அதனை விசாரிப்பதற்கே கொலை செய்தவர்கள் நீதிபதிகளாகவுள்ளனர். தூய்மையான அரசியல் என்பது சிங்கள மக்களிடத்திலிருந்து வர வேண்டும்

முஸ்லீம் இளைஞர்கள் கைது என்பது இங்குள்ள ஆயிரம் முஸ்லீம் மக்களுக்கு ஆபத்து இருக்கிறதா என்பது சந்தேகம் உள்ளது.

2004 ஆம் ஆண்டு அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க. சுயநிர்ணயத்தை அங்கீகரித்தார்.மீளவும் அவர் ஜனாதிபதி தேர்தலில் அதனை முன்வைப்பாராக இருந்தார்.தமிழர்களின் பிரச்சனைகளை தீர்க்க தற்போதைய ஜனாதிபதி வேட்பாளர்கள் தயார் என்றால் அதுவே தூய்மையான அரசியல்.

தமிழ் மக்களை அழிப்பதற்காக கொள்வனவு செய்த ஆயுதங்களில் தான் பல அரசியல் வாதிகள் ஊழல் செய்தனர்.எனவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. - என்றார். (05-113)





# வெசாக் தினத்தை முன்னிட்டு பொலிஸால் தன்சல் வழங்கல்

## வவுனியாவில் நடந்தது



வெசாக் தினத்தை முன்னிட்டு வவுனியா பொலிஸாரால் நேற்று (வியாழக்கிழமை) தன்சல் வழங்கி வைக்கப்பட்டது.

வன்னி பிரதி பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டலில் ஏ-9 வீதியில் அமைந்துள்ள பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலயத்திற்கு முன்னால் சவ்வரசி கஞ்சி வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது வீதியால் சென்ற பலரும் வாகனங்களை நிறுத்தி சவ்வரசி கஞ்சியை பருகி சென்றிருந்தனர்.

இதனையடுத்து, வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தில் சமுதாய பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் இரண்டாயிரம் பேருக்கு சமைத்த உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது வீதியால் சென்ற மக்கள் நீண்ட வரிசையில் நின்று சமைத்த உணவுப் பொதிகளை பெற்றுச்சென்றனர்.

இந்த நிகழ்வுகளில் வன்னி மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சாமந்த விஜய சேகர, சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் மாலன் அஜந்த பெரேரா, வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடி, மதகுருமா, சமுதாய பொலிஸ் குழு உறுப்பினர்கள் சமூக ஆர்வலர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹர்ஷ டிசில்வா தலைமையில் இடம்பெற்ற இந்த அன்னதான நிகழ்வுக்கு பிரதம அதிதியாக ஏறாவூர் பிரிவு உதவி பொலிஸ் அத்தியட்சகர் பியந்த கலந்து சிறப்பித்ததுடன் ஏறாவூர் புளிததலாராம விகாரையின் விகாராதிபதி அலுத்வௌ கம்மரத்ன தேரரின் பங்கேற்புடன் பொலிஸ் நிலைய உப பரிசோதகர் எஸ்.எல்.சரூக் மற்றும் நிலையத்தின் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் இந்த அன்னதானம் வழங்கும் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

வீதியால் பயணித்த பல்லாயிரக் கணக்கான பயணிகள் மற்றும் பாதாசாரிகளுக்கும் குளிர்பானம் மற்றும் சிற்றுண்டிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)



# ஊடகவியலாளர் கபிலநாத்தின் 'யாத்திரை' நூல் வெளியீடு

வவுனியாவை சேர்ந்த ஊடகவியலாளர் நவரத்தினம் கபிலநாத்தின் யாத்திரை நூல் எதிர்வரும் இன்று (வெள்ளிக்கிழமை) வெளியிட்டு வைக்கப்பட உள்ளது.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மனித உரிமை செயற்பாட்டாளரும் தைரியமிக்க பெண்களுக்கான அமெரிக்க அரசாங்கத்தின் விருது பெற்றவருமான சட்டத்தரணி திருமதி ரனித்தா ஞானராசா கலந்து கொள்வதோடு சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சி.மங்களேஸ்வரன் மற்றும் வீரகேசரியின் பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, கௌரவ விருந்தினர்களாக வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கனும் ஆய்வாளரும் மூத்த ஊடகவியலாளருமான தமிழ்நிதி அருணா செல்லத்துரையும் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்தினை க. அகரனும் வரவேற்புரையினை க. அட்சகியும் ஆற்ற உள்ளதோடு நிருத்தியார்ப்பன நடனக் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனமும் இடம்பெற உள்ளன.

இதேவேளை குறித்த நிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளர் அ. நிக்சன் சிறப்புரை ஆற்ற உள்ளதோடு நூல் விமர்சனத்தினை தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி எஸ் சிவகரன் ஆற்றவுள்ளார்.

குறித்த நூலில் தமிழர் அரசியல் களம், அரசியலாளர்களின் நிலைப்பாடுகளும் மக்களின் நிலைப்பாடுகளையும் உள்ளடக்கிய அரசியல் கட்டுரைகள் இடம்பெற உள்ளதோடு இது நூலாசிரியரின் இரண்டாவது நூல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.(05 - 100)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## மெத்தனப் போக்கு வேண்டாம்

**பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் தொடர்ச்சியாக நடத்திவரும் போராட்டம் அரசால் கண்டுகொள்ளப்படாமல் இருப்பதை அடுத்துப் போராட்டம் காலவரையறையின்றித் தொடர்கின்றது. இதனால் ஆளும் தரப்புக்கு எந்த நட்டமும் இல்லாவிட்டாலும் ஒட்டுமொத்த உயர் கல்வித்துறையும் முடங்கிப் போய் உள்ளது சமூகத்திற்குப் பெரும் பாதிப்பே. அதுமட்டுமல்ல அரசின் இந்த மெத்தன, புறக்கணிப்புப் போக்கு வேறு பல சந்தேகங்களுக்கும் காரணமாக அமைக்கின்றது.**

**தமது நியாயமான உரிமைகளைக் கோரி, கல்விசாரா பல்கலைக்கழக ஊழியர்களின் வேலை நிறுத்தம் தொடர்பில் ஆளும்தரப்புக்காட்டும்மௌனம்மிகவும்சந்தேகத்திற்குரியது என்று சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகப் பேராசிரியர் கென்னடி டி குணவர்த்தன தெரிவித்தார். ''ஆளும் தரப்பின் இந்த அலட்சியம் இலங்கையில் உள்ள தனியார் பல்கலைக்கழகங்களை ஊக்குவிக்கும் முயற்சியாக இருக்கலாம் மற்றும் அரச பல்கலைக்கழகங்களை மூடுவதற்கு காரணமாக இருக்கலாம்'' என்று சந்தேகம் வெளியிட்டார் அவர்.**

**ஆளும் தரப்பு தனியார் பல்கலைக்கழகங்களை வைத்திருக்க விரும்பினால் வைத்திருக்கலாம் , ஆனால் அதற்காக அரச பல்கலைக்கழங்களை வலுவிழக்க, வீழ்ச்சியடையச் செய்யாதீர்கள் என்றும் அவர் ஆளும் தரப்பினரிடம் வலியுறுத்தினார். இருந்தாலும் ஆளும் தரப்போ போராட்டம் குறித்து அக்கறைப்படுவதாக இல்லை. பிரச்சினையைத் தீர்ப்பதற்கான எந்த நடவடிக்கைகளையும் எடுப்பதாகவும் இல்லை.**

**பல்கலைக்கழகஆசிரியர்சங்கத்தின்மூத்தபேராசிரியரும் நிர்வாக சபை உறுப்பினருமான பேராசிரியர் குணவர்தன தற்போதைய நிலைமையை இப்படி விளக்குகிறார். கல்விசாரா ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கையின் மீதான ஆளும் தரப்பின் அலட்சியத்தால், நாடும் முழு உயர்கல்வித் துறை எதிர்கொள்ளும் இழப்பு மிகப் பெரியது, இந்த வேலைநிறுத்தம் 17 பல்கலைக்கழகங்கள் மற்றும் 18 துணை அமைப்புகளைச் சேர்ந்த 16,000 ஊழியர்களைப் பாதிக்கிறது, 20 நாட்களில் 8 மணி நேர வேலை நாளைக் கருத்தில் கொண்டால், வேலைநிறுத்தத்தால் 2.56 மில்லியன் மனித நாட்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது, இது மிகப் பெரும் இழப்பு என்று பட்டியலிடுகின்றார் அவர்.**

**இந்தப் போராட்டத்தால் ஏற்படு; இடையூறு மாணவர்களின் கல்வியை ஆபத்தில் ஆழ்த்துகிறது, அவர்களிடம் விரக்தியை ஏற்படுத்துகிறது என்று கூறும் பேராசிரியர், மாணவர்கள் சிலர் தங்கள் படிப்பை முற்றிலுமாக கைவிடவும் இது வழிவகுக்கும் என்று எச்சரித்தார். ''பல்கலைக்கழகங்கள் வெறும் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களைவிட அதிகமானவை, ஆய்வகங்கள், ஆராய்ச்சி வசதிகள் மற்றும் விரிவுரை அரங்குகள் போன்ற முக்கிய உள்கட்டமைப்புகளை உள்ளடக்கியது, இவை அனைத்தும் இப்போது செயல்படாமல் உள்ளன, உயர் கல்வியை இது முடக்கிப் போட்டுள்ளது'' என்பது பேராசிரியரின் குற்றச்சாட்டாக இருக்கின்றது.**

**அதிகாரிகள், அரசியல் கட்சிகள், மதகுருமார்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இந்த பாரதூரமான பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கும், பல்கலைக்கழகங்களை முழுமையாக இயங்கச் செய்வதற்கும் ஒத்துழைக்கவேண்டும் என்றும் அவர் கோரிக்கை முன்வைத்தார்.**

**ஆளும் தரப்பு பொருளாதார நெருக்கடிகளுக்குள் இருக்கின்றது என்றாலும் அது தனது செலவுகளைக் குறைத்துக்கொண்டு கல்வி மீதான முதலீட்டை உறுதிப்படுத்த வேண்டியது ஆளும் தரப்பின் கடமை. அதனைச் செய்யத் தவறும் ஆட்சியாளர்கள் மீது மக்கள் நம்பிக்கையிழப்பதும் சந்தேகம்கொள்வதும் இயல்பானதே. அது அடுத்தடுத்த தேர்தல்களிலும் நிச்சயம் எதிரொலிக்கும் என்றும் எதிர்பார்க்கலாம். எனவே இது விடயத்தில் ஆளும் தரப்பினர் உடனடியாக நடவடிக்கை எடுத்து, பலகலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு பல்கலைக்கழகங்கள் தமது இயல்பு நிலைக்குத் திரும்புவதை உறுதிப்படுத்த வேண்டும்.**

# எதிர்காலத்தின் சாபக்கேடு

என் சத்திய மூர்த்தி

இதை 'விதி' என்பதை தவிர வேறு எந்த விதத்திலும் விவரித்திட முடியாது. ஒவ்வொரு வருடமும் இனப்போரின் கடைசி அத்தியாயத்தை நினைத்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள இலங்கை தமிழர்கள் மனமுருகும் இந்த மே மாதத்தில் தான், அக்கரையில், இந்தியர்கள் அவர்களின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் இறப்பை நினைவுகூர்வார்கள். இதில் ஒன்று, இலங்கை இராணுவத்தினர் அரங்கேற்றிய படுகொலை என்றால், மற்றது, விடுதலை புலிகள் அமைப்பால் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டது. முதலாமது தியாகம் என்றால், இரண்டாவது அதைவிடப பெரிய தியாகம். அது குருதி என்றால், இதுவும் குருதி. இது தக்காளி சட்னி என்றால், அதுவும் அவ்வாறே.

இவ்வாறு கூறுவதால், இலங்கையில் தமிழர்களின் இழப்புகளைக் கொச்சைபடுத்துவதாக அர்த்தம் அல்ல. மாறாக, அது, தமிழர்களை வழிநடத்தியவர்களின் செயல்பாட்டை விமர்சிப்பது மட்டுமே. அத்துடன், ஆட்டு மந்தையாக, விடுதலை புலிகள் அமைப்பின் தப்பு தாளங்களுக்கு எல்லாம் தவறாக ஆடிவிட்டு, அதுவே வீர விளையாட்டு என்று இன்னமும் நம்பி இருக்கும் மக்கள்தான் உண்மையிலேயே 'அப்பாவி தமிழர்கள்'.

அந்த மக்கள், இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும் அந்த நம்பிகையில் இருந்து வழுவாமல் பார்த்துக்கொள்ளும் உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் எல்லாம், விடுதலைப் புலிகள் அமைப்பின் கொள்கை- கோட்பாடுகளைவிட, அதன் காசு பெறாத பிடிவாதத்திற்கு ஒரு படி மேல் சென்று 'இன்டலெக்சுவல்' சாயம் பூசி வருகின்றன. அரசின் பொறுப்பு கூறல் குறித்து வாய்கிழிய பேசிவரும் இவர்கள், அந்த சமுதாயத்திடம் எவ்வளவு பொறுப்பாக நடந்து கொள்கிறார்கள்?

இதில் தமிழ் அரசியல் கட்சிகளின் நிலைமை அரோகரா! அவர்களின் கதியும் அதுவே. அவர்கள் மக்களை வழி நடத்துகிறார்களா என்றால், இல்லை. அவர்களையே விடுதலை புலிகள் அமைப்பின் அளவிற்கு யாராவது வழி கட்டாயபடுத்துகிறார்களா, என்றால், அதுவும் இல்லை.

உண்மையை சொல்லப்போனால், விடுதலை புலிகள் அமைப்பின் மூன்று தசாப்த காலகட்டத்தில், மூளை மழுங்கி, செயலிழந்த அதே தலைவர்களும் தலைமைகளும் 'சித்தன் போக்கு, சிவன் போக்கு' என்ற யோக நிலையை அடைந்து விட்டார்கள். அதே நிலையை, அவர்கள் தமிழ் சமூகத்திற்கும் நல்கி வருகிறார்கள். அவர்களது ஆட்டம் இன்னமும் எடுபடுகிறது என்றால், அதற்கு காரணமும் இந்த அப்பாவி மக்கள்தான்.

### மத அரசியல்

இதற்கிடையில் அண்மைக் காலமாக, உண்மையிலேயே சிவனடியார்கள் என்றும் மடாதிபதிகள் என்றும் மரியாதைக்குரியவர்கள் நேரடி அரசியலில் குதித்து வருகிறார்கள். அவர்களில் வேலன் சுவாமிகளின் பெயர், ஜனாதிபதி தேர்தலில், தமிழர்களின் பொது வேட்பாளர் என்ற அளவிற்கு பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆனால், அவரது மத சாயத்தை காட்டியே அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று ப்ளொட் தலைவர் சித்தார்தன் போன்றோர் உடனடியாகவே அறிவித்தார்கள்.

சித்தார்த்தன் போன்றோர் கூறியதில் நியாயம் இருக்கிறது. என்றாலும், இது போன்று மதத் தலைவர்கள் அரசியலில் ஈடுபடுவது தமிழர்களுக்கு புதிய விடயம் அல்ல. இனப்பிரச்சினை தோன்றிய காலம் தொட்டு, தமிழர்களிடையே கிறித்தவ மதத்தினரும் ஒரு சேரப் போராடி வந்திருக்கிறார்கள். அவர்களது மத குருமார்களும் அந்த சமுதாய போராட்டத்திற்கு மானசீக தலைமைத்துவம் நல்கி இருக்கிறார்கள்.

குறிப்பாக, இனப்போருக்கு பிந்தைய காலகட்டத்தில், அன்றைய தமிழ் தேசிய கூட்டமைப்பு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அரசுடன் பேச்சு நடத்தியபோது, அவர்களை வழிநடத்திச் செல்ல வேண்டும் என்று கூறிக்கொண்டு மறைந்த மன்னார் பிஷப் ராயப்பு ஜோசப் ஆண்டகை, நேரடியாகவே சம்மந்தன் முதலியோரை இல்லாத ஒரு சமூக அமைப்பின் பெயரில் நேரடி பேச்சுக்கு அழைத்து, அதனை வழிநடத்தவும் செய்தார்.

மறு பக்கம்

இது இப்படி என்றால், மத அரசியலின் அடுத்த பக்கம் அல்லது மறு பக்கம் அப்பட்டாக கடந்த வருடம் அரங்கேறி அப்போதே மறந்துபட்ட யாழ்பாண மேயர் தேர்தலின் போது வெளிப்பட்டது. தமிழ் அரசுக் கட்சி தலைமையின் பார்வையில் இரண்டு வேட்பாளர்கள் தென்பட்டனர். அவர்கள் இருவருமே கத்தோலிக்க கிறிஸ்தவர்கள்.

அவர்களில் ஒருவரான ஆர்னால்ட் முன்னமே மேயராக இருந்தவர். எனவே அடுத்தவருக்கே வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்தது. மற்றையவர் சொலமன் சூ. சிறில் ஆனால், அவரோ, தான் போட்டியில் இருந்து விலகி கொள்வதாக இறுதித் தருணத்தில் அறிவித்தார். அதற்கு அவர் கூறிய காரணம்? யாழ்பாண ஆயர் அவ்வாறு பணித்தார் என்பதே.

அதேசமயம், கடந்த 2021ம் ஆண்டு நடந்தேறிய 'பொத்துவில் முதல் பொலிகண்டி வரை' பேரணியில், இஸ்லாமியர் உள்ளிட்ட அனைத்து மதத்தினரும் அவற்றின் மத தலைவர்களும் பங்கு பெற்றனர். அந்த பேரணி காலகட்டத்தில் முன் வைக்கப்பட்ட பெயர் தான் வேலன் சுவாமிகளும்கூட.

### சாதிச் சாயம்

ஆனால், தமிழர்களின் தற்போதைய பிரச்சினை மதம் அல்ல. அல்லது மதம் மட்டும் அல்ல. உள்வீட்டு தகவல்களை ஆராய்ந்தால், இனப்போர் காலகட்டத்தில் ஒடுக்கப்பட்டிருந்த பாழாய் போன சாதி முரண்பாடுகள் மீண்டும் முன்னுக்கு வரும் என்ற கவலை எழுந்துள்ளது.

அதாவது, தமிழினம் குறித்து நீட்டி முழக்கும் புலம்பெயர்ந்தோரில் பலரும், தங்களது சொந்த ஊர்களில் உள்ள கோவில்களுக்கு உதவி செய்யும் விதமாக, அவற்றின் மீது மறந்துபட்ட சாதிச்சாயத்தை பூசி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அல்லது, அவ்வாறான சாயத்தை, அறிந்தோ அறியாமலோ, பூச முற்பட்டு வருகின்றனர்.

உண்மையை சொல்லப்போனால், விடுதலை புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டில் தமிழர்களும் தமிழர் பகுதிகளும் இருந்த காலகட்டத்தில் கூட ஜாதி சாயம் நீறு பூத்த நெருப்பாகவே இருந்து வந்தது. அது அவ்வாறு அல்ல. உண்மையிலேயே தமிழர்களை பீடித்திருந்த சாதி வெறி காணாமல் ஆக்கப்பட்டுவிட்டது என்று அடுத்தவர்களை நம்ப வைக்க முயற்சித்தவர்கள் ஏராளம். அதில் ஒரு சிலராவது, அது உண்மை என்று நம்பினார்கள்.

உண்மையை சொல்லப்போனால், அரசியல் கட்சிகளில், தமிழ் அரசுக் கட்சியை விடுத்து, பெரும்பாலானவை ஏதோ ஒரு ஜாதியை சார்ந்தே அன்றும் இருந்தது. இன்றும் அந்த நிலையை தொடர்கிறது. அவற்றில் கூட, குறிப்பிட்ட சாதிக் கட்சிகள், வட மாகாணத்தின் ஒவ்வொரு பகுதி அல்லது மாவட்டத்தை குறி வைத்தே, அந்த குறியீட்டின் மூலமே அறியப்படுகின்றன. அது பெரிய கட்சிகளின் தனிப்பட்ட தலைவர்களுக்கும் பொருந்தும்

### சாபக்கேடு

தமிழர்களிடையே மத அரசியல் மற்றும் சாதி அரசியல் புகுந்தால், அது சமூகம் முழுவதையுமே பாதிக்கும் என்பது உறுதி. குறிப்பாக, இன அரசியலில், தற்கொலைக்கு சமமான இது போன்ற தமிழர்களின் சமூக-அரசியல் சீரழிவை தான், தென்னிலங்கையின் சிங்கள-பௌத்த பேரினவாதிகள் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள்.

அவ்வாறு 'காத்திருக்கிறார்கள்' என்றால், அவர்களுடைய அரசியல் தலைமைகள், கடந்த தசாப்தங்களில்கூட, தமிழ் சமூகத்தை நன்றாகவே எடைபோட்டு வைத்திருக்கிறார்கள் என்று அர்த்தம். இனப்போர் முடிந்துபட்ட காலகட்டத்தில், சம்மந்தன் இல்லாத தமிழ் சமூகமே இவ்வாறு சீரழியும் என்று அவர்கள் போட்ட கணக்கு மட்டும்தான், தப்பு.

மாறாக, சம்மந்தனின் காலத்திலேயே. தமிழர்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# யாழில் கடற்தொழிலுக்கு சென்றவர் கடலில் மயங்கி விழுந்து உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் கடற்தொழிலுக்கு சென்ற தொழிலாளி ஒருவர் புதன்கிழமை கடலில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

அல்லைப்பிட்டி 3 ஆம் வட்டாரத்தை சேர்ந்த 58 வயதுடைய அந்தோணிப்பிள்ளை றோமன்மெய்ன்ரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

கட்டுமரமொன்றில் மீன் பிடிப்பதற்காக கடலுக்குள் சென்ற வேளை, கட்டுமரத்தில் இருந்து தவறி கடலினுள் விழுந்து உயிரிழந்துள்ளார். சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(05)

# இங்கிரியவில் வீடொன்றிலிருந்து வயோதிபப் பெண்ணின் சடலம் மீட்பு

இங்கிரியபொலிஸ்பிரிவிற்குட்பட்டமடகடபிரதேசத்தில் உள்ள வீடொன்றிலிருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக இங்கிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

இங்கிரிய, மடகட பிரதேசத்தைச் சேர்ந்த 64 வயது பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் பிரேதப் பரிசோதனைக்காக ஹொரணைவைத்தியசாலையில்வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இங்கிரிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# அஹுங்கல்ல சூட்டுச் சம்பவத்திற்கு உதவியவர் பொலிஸாரினால் கைது

அஹுங்கல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதானை பிரதேசத்தில் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உதவி செய்ததாகக் கூறப்படும் சந்தேக நபரொருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சந்தேக நபர் அஹுங்கல்ல, வெலிகந்த பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிகந்த பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயது நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் இந்த துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தில் உயிரிழந்த நபர் தொடர்பில் கண்காணித்து துப்பாக்கிதாரிகளுக்குத் தகவல் வழங்கி உதவி செய்துள்ளார் எனப் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அஹுங்கல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# புத்தளம் வலய பாடசாலைகளில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் மரங்களை வெட்டியகற்ற அனுமதி!

(எம் எச்.எம் சியாஜ்)

புத்தளம் வலய பாடசாலைகளில் முறிந்து விழும் நிலையில் உள்ளமரங்கள்மற்றும்ஆபத்தைஏற்படுத்தும் எனக் கருதும் மரங்களை வெட்டுவதற்கு புத்தளம் மாவட்ட செயலாளரால் அனுமதி வழங்கப்பட்டது.

கிராம அதிகாரி, பிரதேச செயலாளர் ஊடாக இதனை மேற்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கென மேலதிக பணம் தேவையாயின் மாவட்ட செயலாளருக்கு இது தொடர்பாக அறிவிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# எதிர்காலத்தின் சாபக்கேடு

4ம் பக்க தொடர்ச்சி...........

தரப்புகள் தங்களுக்குள் உள்குத்து அரசியலை வெளிப்படையாகவே அரங்கேற்றி வருகின்றனர். அதனை தடுத்து நிறுத்தும் உடல் வலிமையோ, மன வலிமையோ, ஏன், அரசியல் வலிமையோ அவருக்கு தற்போது இல்லை.

இதன் அடுத்த கட்டம் தான், மதம் மற்றும் ஜாதி சார்ந்த பிராந்திய அல்லது அதற்கும் கீழான மாவட்ட அரசியல். அந்த நிலைக்கு, தமிழ் சமூகம் மெதுவாக தள்ளப்படுகிறது என்றே தோன்றுகிறது. அதிலும் குறிப்பாக, தற்போது இலங்கை தமிழ் இனத்தவர்களிடையே 'தலித்' அரசியலும் தலைதூக்கி வருகிறது என்பதும், அதற்கான சமூக நிலைபாடுகள் தொடர்கின்றன என்பதும் வருத்தப்பட வைக்கும் விடயம்.

## கண்ணுக்கு எட்டும் தூரம்

பூனைக்கு யார் மணிகட்டுவது? அதற்கான ஒரு தலைவர் தோன்றியிருந்தால், அவர் இன்றளவும் கண்ணுக்கு எட்டும் தூரம் வரை தென்படவில்லை. மாறாக, கண்ணில் தென்படும் தலைவர்கள் அனைவருமே, அந்த பூனைகளில் ஒருவராகவே இருக்கின்றனர். அவ்வாறே செயல்படுகின்றனர்.

ஆனால், ஒன்று. தற்போதைய சமூக-பொருளாதார அரசியல் சூழலில், தமிழர்கள் இன்னொரு செல்வநாயகத்தையோ, ஏன், அமிர்தலிங்கத்தையோ, ஆனந்தசங்கரியையோ, எதிர்பார்க்கக் கூடாது. உண்மையை சொல்லப்போனால், அவ்வாறன தலைவர், சம்மந்தனின் பாதி அளவிற்காகவது தலைமைத்துவ தகுதிகளை பெற்றிருந்தால் அதுவே பெரிய விடயம்.

இதற்கு காரணம், விதைத்த விதை தான் முளைக்கும். அது போன்றே, தற்போதைய தமிழ் சமூகத்தின் பிரதிபலிப்பே எதிர்பார்க்கும் தலைமைக்கும் இருக்க முடியும். அந்த விதத்தில், விடுதலை புலிகள் அமைப்பின் அடிமைகளாக உடல், பொருள், ஆவி என்று அனைத்தையும் அடகு வைத்து, பழகிப்போன ஒரு இனத்திற்கு தனக்கு என்று ஒரு தனி மனிதத்துவ அடையாளம் இருக்கிறது என்பதே மறந்து போய்விட்டது.

அதிலும் குறிப்பாக, புதிதாக ஒரு தலைவர் அல்லது தலைவர்கள் தற்போது உருவெடுப்பார்களேயானால், அவர்கள் இடைகாலத்தில், தமிழர் தரப்பினரை ஒன்றிணைப்பதை முன்னெடுக்கும் ஒரு கருவி மட்டுமே தானே அனைத்து காலத்திற்கும் ஒன்றுபட்ட அனைத்து தமிழ் மக்களுக்கும் ஒரே தலைவர் என்று அவரோ, அல்லது அவர்களோ நினைத்து செயல்படுவார்களேயானால், அதுவே எதிர்கால தமிழ் இனத்தின் அடுத்த சாபக்கேடு!




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# உணவுப் பார்சலில் போதைப்பொருளை மறைத்தபடி எடுத்துச் சென்றவர் கைது

போதைப்பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டில்அனுராதபுரம்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நண்பருக்கு உணவுப் பார்சலில் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள்களை மறைத்து வைத்துக்கொண்டு சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் அனுராதபுரம் ஜயசிறிபுர பிரதேசத்தை சேர்ந்த 43 வயதுடையவராவார்.

கைதுசெய்யப்பட்டவர்போதைப்பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்டவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(05)

# கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக மாற்ற அனுமதி

காலி மாவட்டத்திலுள்ள கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்வதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரனவால் சமர்ப்பிக்கப்பட்டதாக அமைச்சரவை சந்திப்பின் போது எடுக்கப்பட்ட முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் மாநாட்டிவ் நேற்று (வியாழக்கிமை) அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் கண்டி ஆகிய இரண்டு தேசிய வைத்தியசாலைகளுக்கு மேலதிகமாக மூன்றாவது தேசிய வைத்தியசாலையாக கராப்பிட்டிய அமையும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். (05)

# சந்ததிகள் கடந்தும் தாயகம் இழந்தும் நீதிக்காக போராடும் தமிழ் இளையோர்

## பிரித்தானியாவில் தமிழின அழிப்பு நினைவு தினத்தில் தமிழர் வலியை உலகுக்குணர்த்திய நடன நிகழ்வு

*மபிரித்தானிய தமிழர் பேரவையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நினைவு தினத்தில், தமிழர் தாயகத்தில் நடைபெற்ற இனப்படுகொலையை நினைவு கூரும் வகையிலும், படுகொலை செய்யப்பட்ட எம் உறவுகளுக்கான நீதி கோரியும் நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.*

*இந்த நினைவு தினத்தில், தமிழ் இளையோர்கள் முன்னின்று இந்நிகழ்வுகளை வெற்றிகரமாக ஒழுங்கு செய்திருந்தனர்.*

*இதில் முக்கிய நிகழ்வாக 180 மாணவர்கள் ஒருங்கிணைந்து தமிழர்களின் வலிகளையும், எதிர்கால நம்பிக்கைகளையும் சுமந்து வரும் தாயக பாடல்களுக்கு நடன ஆற்றுகை ஒன்றை மிக சிறப்பாக நிகழ்த்தி இருந்தனர்.*

*உணர்வு பூர்வமாக அமைந்த இந் நிகழ்வைப் பார்வையிட்ட பல்நாட்டு மக்களும் இந்த நிகழ்வு தொடர்பில் கேட்டறிந்து தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலை தொடர்பாக தமது அதிருப்தியை வெளிப்படுத்தி இருந்தனர். (05)*

# திருகோணமலையில் இடம்பெற்ற கார் விபத்தில் சிறுமி உயிரிழப்பு

## சகோதரன் படுகாயம்



யாழ்ப்பாணம், பருத்தித்துறையைச் சேர்ந்த கணவன், மனைவிஇருவரும் இரண்டு பிள்ளைகளுடன் மட்டக்களப்பு நோக்கி பயணிக்கையில் குறித்த கார் வேகக்கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டு விலகியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. குறித்த விபத்தில் கணவன், மனைவி இருவரும் காயங்களின்றி உயிர் தப்பியுள்ளனர்.

திருகோணமலை ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியின் வட்டவன் பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை இடம்பெற்ற கார் விபத்தில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், சிறுமியின் சகோதரன் படுகாயமடைந்தநிலையில்வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேற்படி விபத்துச் சம்பவத்தில் நிதர்சன் ஆதித்யா (வயது 6) என்ற சிறுமியே உயிரிழுந்துள்ளார் எனவும், சிறுமியின் சகோதரனான நிதர்சன் அதிரேஸ் (வயது 4) படுகாயமடைந்த நிலையில் மூதூர் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காகத் திருகோணமலை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் எனவும் ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த சிறுமியின் சடலம் மூதூர் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



# பொகவந்தலாவை பிரதான வீதியில் கார் விபத்து : குழந்தை உட்பட இருவர் வைத்தியாசாலையில்

ஹற்றன், பொகவந்தலாவை பிரதான வீதியில் வனராஜா பகுதியில் புதன்கிழமை மாலை 4 மணியளவில் கார் ஒன்று சறுக்கி வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நோர்வூட் நோக்கி பயணித்த காரே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் காரில் பயணித்த சிறு குழந்தை உட்பட இருவர் காயமடைந்து டிக்கோயா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்து கனமழையால் இடம்பெற்றுள்ளதாக தெரிவித்த நோர்வூட் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)



# ஒரே சூழில் பிறந்த 4 குழந்தைகளும் சுகதேக ஆரோக்கியத்துடன் உள்ளன

## மட்டு. போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மருத்துவ வரலாற்றில் ஒரே சூழில் பிறந்த நான்கு குழந்தைகளும் மிகவும் ஆரோக்கியத்துடன் உள்ளன என வைத்தியசாலையின் பணிப்பாளர் கலாரஞ்சினி கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த கரிகரன் கிருஸ்ணவேணி என்ற தாயே இந்த குழந்தைகளை கடந்த ஏப்பரல் மாதம் 5 ஆம் திகதி பிரசவித்துள்ளார்.

மருத்துவதுறையின்வரலாற்றில் இயற்கை முறையில் இவ்வாறு கருத்தரிப்பது அரிதானவிடயமாகவே காணப்படுவதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்தியர் சரவணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகவியலாளர்களை தெளிவுபடுத்தும்வகையான ஊடகவியலாளர் சந்திப்பு புதன்கிழமை காலை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர்கலாரஞ்சினி, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் சரவணன், குழந்தை நல வைத்திய நிபுணர் மதன் ஆகியோர் இங்கு கருத்து தெரிவித்தனர்.

இதன்போது சுகப்பிரசவத்தில் பிறந்த குழந்தைகள் கொண்டு வரப்பட்டு ஊடகவியலாளர்களுக்கு காண்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் மைதிலி உட்பட வைத்தியர்கள், தாதியர்கள் கலந்துகொண்டனர்.

இவ்வாறு ஒரே சூழில் நான்கு குழந்தைகள் பிறக்கும் செயற்பாடானது 5 லட்சத்து 70ஆயிரம் தாய்மார்களிலே ஒருவருக்கு இடம்பெறுவதாகவும் அதுவும் செயற்கை முறையிலான கருத்தரிப்பு மூலமே அவ்வாறான விடயமும்சாத்தியமாககாணப்படும்.

இந்நிலையில், இயற்கையாக கருத்தரித்து சுகப்பிரசவமாக நான்கு குழந்தைகளை இந்த தாய் பிரசவித்தமை மருத்துவதுறையில் மிகவும் அரிதான விடயமாக பார்க்கப்படுவதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் சரவணன் தெரிவித்தார்.

பிறந்த நான்கு குழந்தைகளும் மிகவும்ஆரோக்கியத்துடன்உள்ளன என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் கலாரஞ்சினி தெரிவித்தார்.

இதேநேரம் தமது பிரசவத்திற்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது தமக்கு சகல வழிகளிலும் உதவியவர்களுக்குநான்குபிள்ளைகளைபிரசவித்ததாயார்இதன்போது நன்றி தெரிவித்தார். (05)

## முதலில்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதை நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேசகடன்மறுசீரமைப்புக்கு இந்தியா, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் பரிஸ் கிளப் நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளதோடு, சீனா ஓரளவு சாதகமான சமிஞ்ஞைகளை காண்பித்துள்ளது.

இதேவேளை அரசியலமைப் பிற்கமைய தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதையும் நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது. அதற்கமைய தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளதைப் போன்று செப்டெம்பர் 16 - ஒக்டோபர் 17க்குள் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என்றார்.

## உலகம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மாத்தளை வரலாற்றுச் சிறப்புமிக்க அலுவிகாரையில் திரிபீடகம் பிரதிஷ்டைசெய்யப்பட்டதன் காரணமாகவே புனித பௌத்த மதம் பாதுகாக்கப்பட்டதாக சுட்டிக்காட்டினார். தேரவாத பௌத்தத்தின் முக்கிய இடமாக விளங்கிய மாத்தளை மாவட்டத்தை மையமாகக் கொண்டு இவ்வருடம் அரச வெசாக் பண்டிகையை கொண்டாடும்வாய்ப்புகிடைத்தமை குறித்தும் ஜனாதிபதி மகிழ்ச்சி தெரிவித்தார்.

அநுராதபுர யுகத்தில் இருந்த பிரிவேனாக்களில் இருந்து மகா சங்கத்தினர் மட்டும் உருவாகவில்லை. உலகின் முக்கியமான நீர்ப்பாசன முறையை இலங்கையில் ஆரம்பிக்கும் வாய்ப்பு அந்தக் கல்வி முறையினால் கிடைத்ததாக செனரத் பரணவிதான போன்ற அறிஞர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

இன்று உலகம் மூடநம்பிக்கையிலிருந்து விலகிச் செல்கிறது. அறிவியலில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. புதிய தொழில்நுட்பத்தால், பல நூற்றாண்டுகளாக நமது வாழ்க்கை முறை முற்றிலும் மாறிவருகிறது. குறிப்பாக மருத்துவத்துறையும்தொழில்நுட்பத் துறையும் வளர்ச்சியடைந்துள்ளன. அதேநேரம், வானவியல் பற்றிய புதிய அறிவு மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் பெறப்பட்ட அறிவின் வளர்ச்சியுடன், நாம் இன்னும் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

ஆனால்தேரவாதபௌத்தத்தைப் பின்பற்றுபவர்களுக்கும் அதன் உண்மையான அர்த்தத்தை அறிந்தவர்களுக்கும் இது ஒரு பிரச்சினையல்ல. தேரவாத பௌத்தத்தின் ஊடாக இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். எனவே, தேரவாத பௌத்தத்தின் உண்மையான நோக்கத்தைப் பாதுகாப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.உங்கள்அனைவருக்கும் வெசாக்வாழ்த்துக்கள்உரித்தாகட்டும் என்றார்.

## பொருந்தோட்டப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடும்பங்கள் மட்டளவில் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டிருந்தன. இந்த வீதம் மார்ச் மாதத்தில் 17சதவீதமாக காணப்பட்டதுடன், ஆகஸ்ட் - செப்டெம்பர் வரையான காலப்பகுதியில் 24சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

ஆண் தலைமைத்துவ குடும்பங்களில் 23சதவீதமாகவும் பெண் தலைமைத்துவ குடும்பங்களில் 32சதவீதமாகவும் உணவு பாதுகாப்பின்மை காணப்படுகிறது.

26சதவீதமான குடும்பங்களில் போதுமானளவு உணவு எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. குடும்பமொன்று அதன் மொத்த செலவில் 62 சதவீதத்திற்கும் மேல் உணவுக்காக செலவிடப்படுகின்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# திரியாய் வைத்தியசாலை குண்டுவெடிப்பு சந்தேகநபருக்குப் புதனன்று பிணை

திரியாய் வைத்தியசாலை குண்டுவெடிப்பு தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் புதன்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

குச்சவெளி சுற்றுலா நீதிமன்றில் இடம்பெற்று வந்த குறித்த வழக்கு விசாரணைக்காக நீதிவான் திருமதி ஜீவராணி கருப்பையா முன்னிலையில் புதன்கிழமை எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிவான் குறித்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

குறித்த வழக்கில் எதிரி சார்பாக பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி தேவராஜா ரமணன் முன்னிலையாகியிருந்தார்.

குறித்த கைதானது, கண்கண்ட சாட்சியங்கள், ஆதாரங்கள் எவையும் இன்றி ஊகத்தின் அடிப்படையில் இடம்பெற்றுள்ளதாகவும், சம்பவம் இடம்பெற்ற நேரத்தில் குறித்த நபர் புல்மோட்டை - இல்மனைற் தொழிற்சாலையில் கடமையில் இருந்ததாகவும் குறித்த சந்தேக நபரிடம் இருந்து எவ்வித சான்றுப் பொருள்களும் கைப்பற்றப்படவில்லை போன்ற சமர்ப்பணங்களை எதிராளியின் சார்பாக சட்டத்தரணி முன்வைத்திருந்தார்.

இதையடுத்து சந்தேக நபரை இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான சரீர பிணையில் விடுவிக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார். திருகோணமலை, திரியாய், ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்தில் மார்ச் 14ஆம் திகதி இரவு 7.30 மணியளவில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றிருந்தது.

சம்பவம் தொடர்பாக அங்கு பணியாற்றிய வைத்தியரின் வாக்கு மூலத்தின் அடிப்படையில் புல்மோட்டை இல்மனைட் தொழிற்சாலையில் பணியாற்றிவரும் நபர் ஒருவர் குச்சவெளி பொலிஸாரால் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு அரச சொத்துக்கு தீங்கு விளைவித்தமை மற்றும் தண்டனை சட்டப்பிரிவுக்குக்கீழும் வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்நிலையில் 67 நாள்களுக்குப் பின்னர் குறித்த நபர் புதன்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# பல்வேறு சுகாதார பிரச்சினைகள் ஏற்படும் அபாயம் புத்தளத்தில்

(எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கன மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள அனர்த்த நிலைமைகளைத் தொடர்ந்து பல சுகாதார பிரச்சனைகளும் ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

வயிற்றோட்டம், எலிக்காய்ச்சல் மற்றும் சிரங்கு போன்ற நோய்கள் ஏற்படலாம் எனவும், பொதுமக்கள் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறும் புத்தளம் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், புத்தளம் நகரசபை மற்றும் புத்தளம் ஜம்இயத்துல் உலமா புத்தளம் நகரக் கிளை ஆகியன இணைந்து கேட்டுக்கொண்டுள்ளன.

காய்ச்சல், வயிற்றோட்டம், வயிற்று வலி போன்ற நோய்கள் காணப்பட்டால் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலைக்கு செல்லும்படி பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அத்தோடு கீழ்வரும் சுகாதார பழக்க வழக்கங்களை கடைபிடிக்கும்படியும் வேண்டிக்கொள்ளப்படுகின்றது.

முடியுமானவரை கொதித்தாறிய நீரையே அருந்துங்கள்.

எப்போதும் நன்கு சமைக்கப்பட்ட உணவுகளை உட்கொள்ளுங்கள்.

முடியுமானவரை வீடுகளில் தயாரித்த உணவுகளை உண்ணுங்கள்.

மலசல கூட்டத்திற்கு சென்று வந்தால் சவர்க்காரமிட்டு கைகளை கழுவுங்கள்.

உணவுகளை உண்ணு முன்பும் பின்பும் சவர்க்காரமிட்டு கைகளைக் கழுவுங்கள்.

வெள்ள நீரால் கிணறுகள் பாதிப்படைந்து இருந்தால் சரியான முறையில் சுத்திகரிப்பு செய்து குளோரின் இட்டு தொற்று நீக்கம் செய்து பாவியுங்கள்.

சிறுவர்கள் மற்றும் உடலில் காயங்கள் உள்ளவர்கள் கழிவு நீரில் இறங்குவதையோ விளையாடுவதையோ முடியுமானவரை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

உடலில் காயங்கள் உள்ளவர்கள் குளங்களில் குளிப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

மலசல கூடங்களை குளோரின் இட்டு நன்கு தொற்று நீக்கம் செய்து கொள்ளுங்கள்.

டெங்கு நுளம்பு பரவும் இடங்கள் காணப்பட்டால் உடனடியாக அவற்றை அப்புறப்படுத்துங்கள். - என்று தெரிவிக்கப்பட்டது.(05)

# மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளமையினால் பதுளை - கொழும்பு ரயில் சேவை பாதிப்பு

மலை நாட்டின் ரயில் தியத்தலாவை - ஹப்புத்தளைக்கும் தியத்தலாவை-பண்டாரவளைக்கும் இடையிலான ரயில்; பாதையில் நேற்று (வியாழக்கிழமை) காலை பாரிய டர்பெண்டைன் மரங்கள் முறிந்து வீழ்ந்ததால் பதுளைக்கும் - கொழும்பு கோட்டைக்கும் இடையிலான ரயில் சேவை தடைப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த 'உடரட மெனிகே' ரயில் பண்டாரவளை ரயில் நிலையத்திலும், கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை நோக்கி பயணிக்கும் இரவு அஞ்சல் ரயில் ஹப்புத்தளை ரயில் நிலையத்திலும் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சீரற்ற காலநிலையுடன் ரயில் பாதையில் மரங்கள் வீழ்ந்துள்ளதுடன் தியத்தலாவை இராணுவ முகாம் அதிகாரிகள் ரயில் பாதையில் விழுந்த மரங்களை அப்புறப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (05)

# மருதமுனை பிரீமியர் லீக் சம்பியன் வெற்றிக்கிண்ண அறிமுக நிகழ்வு







(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான சம்பியன் வெற்றிக்கிண்ண அறிமுக நிகழ்வு புதன்கிழமை மாலை மருதமுனையில் நடைபெற்றது.

எம்.பி.எல் நிறைவேற்று குழு தவிசாளர் முஸம்மில் நுஸைர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆபிதா ஹேன்லூம் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.என்.இஸட். றூமி பிரதம அதிதியாக கலந்து கொண்டு சம்பியன் வெற்றி கிண்ணத்தை எம்.பி.எல் நிறைவேற்று குழு தவிசாளரிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் சம்பியன் வெற்றி கிண்ணத்துடன் சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ளும் அணிகளின் தலைவர்கள் கைகோர்த்துக் கொண்டதுடன் பிரீமியர் லீக் நிறைவேற்று பணிப்பாளர் சபை உறுப்பினரும் ஊடகவியலாளர்களுமான ஏ.எல்.எம்.ஷினாஸ், றாஸிக் நபாயில் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (05)

# ஊடகவியலாளர் கபிலநாத்தின் 'யாத்திரை' நூல் வெளியீடு

வவுனியாவை சேர்ந்த ஊடகவியலாளர் நவரத்தினம் கபிலநாத்தின் யாத்திரை நூல் எதிர்வரும் இன்று (வெள்ளிக்கிழமை) வெளியிட்டு வைக்கப்பட உள்ளது.

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மனித உரிமை செயற்பாட்டாளரும் தைரியமிக்க பெண்களுக்கான அமெரிக்க அரசாங்கத்தின் விருது பெற்றவருமான சட்டத்தரணி திருமதி ரனித்தா ஞானராசா கலந்து கொள்வதோடு சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சி.மங்களேஸ்வரன் மற்றும் வீரகேசரியின் பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை, கௌரவ விருந்தினர்களாக வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கனும் ஆய்வாளரும் மூத்த ஊடகவியலாளருமான தமிழ்நிதி அருணா செல்லத்துரையும் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்நிகழ்வில் தமிழ்த்தாய் வாழ்த்தினை க. அகரனும் வரவேற்புரையினை க. அட்சகியும் ஆற்ற உள்ளதோடு நிருத்தியார்ப்பன நடனக்கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனமும் இடம் பெற உள்ளன.

இதேவேளை குறித்த நிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளர் அ. நிக்சன் சிறப்புரை ஆற்ற உள்ளதோடு நூல் விமர்சனத்தினை தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி எஸ் சிவகரன் ஆற்றவுள்ளார்.

குறித்த நூலில் தமிழர் அரசியல் களம், அரசியலாளர்களின் நிலைப்பாடுகளும் மக்களின் நிலைப்பாடுகளையும் உள்ளடக்கிய அரசியல் கட்டுரைகள் இடம்பெற உள்ளதோடு இது நூலாசிரியரின் இரண்டாவது நூல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது. (05 - 100)

# திருகோணமலை சல்லி கடலில் மீனவர்கள் இருவரைக் காணோம்

திருகோணமலை மாவட்டத்தின் சல்லி கடல் பகுதியில் இருந்து கடலுக்குச் சென்ற மீனவர்கள் இருவரை காணவில்லை என அம்மீனவர்களின் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

கடந்த திங்கட்கிழமை 20ஆம் திகதி சல்லி பிரதேசத்தில் இருந்து காலை 10 மணியளவில் கடலுக்குச் சென்ற மீனவர்கள் இருவர் கடல் நடுவே காணாமற்போயுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

வட்டாரம் 2 சல்லி பிரதேசத்தைச் சேர்ந்த குட்டிராசா சசிக்குமார் (வயது 45), முருகையா சுஜந்தன் (வயது 22) ஆகிய இருவருமே காணாமல் போயுள்ளனர்.

இவர்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லை என உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

காணாமற்போன மீனவர்களை தேடி சல்லி பிரதேசத்தைச் சேர்ந்த பத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் சென்றுள்ள நிலையில், இது தொடர்பில் கடற்படைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக மீனவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.(05)

# பதவி என்பது அமானிதம் அதனை நான் தூய்மையாக பாதுகாப்பேன்

**புதிய சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் ஜாபீர்.**

(வி.ரி.சகாதேவராஜா)

பதவி என்பது அமானிதம் அதனை நான் தூய்மையாக



பாதுகாப்பேன். இறைவனின் நாட்டப்படியே எல்லாம் நடைபெறும். அதனடிப்படையில் அல்லாஹ் எனக்கு நாடியிருக்கின்றான்.

இவ்வாறு சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளராக கடமையேற்றபின் உரையாற்றிய எம்.எச்.எம்.ஜாபீர் தெரிவித்தார்.

அவரை கல்விசார் உத்தியோகத்தர்கள் சார்பில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எச்.நைரூஸ்கான் திருமதி நிலோபரா சம்மாந்துறை வலயகல்விசார் உத்தியோகத்தர்கள் நலன்புரி சங்கத் தலைவரும் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் மாலை சூட்டி வரவேற்றார்கள் .

சம்மாந்துறை வலய அதிபர் சங்கத்தின் தலைவர் முத்தலிப் மாலை அணிவிக்க செயலாளர் நிஹால் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

கடமையேற்கும் நிகழ்வுகள் பிரதிக் கல்வி பணிப்பாளர் எச்.நைறோஸ்கான் தலைமையில் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை வலயக்கல்வி பணிமனை சார்பில் கணக்காளர் வை.ஹபிபுல்லாஹ் சிறப்புரை நிகழ்த்தப்பட்டது. பிரதி, உதவி கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் கலந்து கொண்டனர்.

கடமையேற்ற பின்னர் வலயக் கல்விப் பணிப்பாளர் உரையாற்றும் போது சம்மாந்துறை வலயத்தை மேலும் முன்னேற்றுவதற்கு எனது சக்திக்கு அப்பால் செயற்படுவேன். அந்த வகையில் நீங்கள் பெரிய பொறுப்பினை சுமந்திருக்கிறீர்கள் இனிவரும் காலம் என்னுடன் சேர்ந்து குழுப் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.(05)




# எண்ணம் போல் வாழ்வு

' உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல் : மற்ற அது
தள்ளிலும் தள்ளாமை தீர்த்து'

என்ற திருக்குறளை அசைபோட்டுப் பார்க்கும் போது வள்ளுவரின் சூட்சுமமும் நமக்குப் புரிய வரும். ஏன் உள்ளுவது எல்லாம் உயர்வாய் இருக்க வேண்டும்? அது கிடைக்கா விட்டாலும் உயர்வாய் எண்ணுவதை விடக்கூடாது என்று அழுத்தமாகக் கூற காரணம் என்ன? சிந்தித்தோமானால் வள்ளுவர் மிகப் பெரிய மனோவியல் உண்மையை நம்மிடம் உரைக்கின்றார்.

நாம் எண்ணும் எண்ணம் என்பது நூலில்லாத பட்டத்தை போன்றது. வானத்தில் அது பறந்துகொண்டிருக்கிறது என்பதை விடஇ மிதந்து கொண்டிருக்கிறது என்பதே சரி. வெறும் பட்டங்களாக அல்ல படங்களாக நாம் எண்ணும் எண்ணங்கள் ஒரு நொடிக்கு ஐந்து இலட்சம் கிலோ மீற்றர் வேகத்தில் எதை நினைக்கிறோமோ அங்கு சென்ற உடனே நம்மிடம் திரும்புவதாக மனோவியலாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

வள்ளுவர் சொன்ன அந்த ' உயர்' என்ற வார்த்தையை கவனியுங்கள் உயர்வாய் நினைப்பன உன்னை உயர்த்தும் என்ற வரிகள் எவ்வளவு பெரிய உண்மையை உணர்த்துகிறது. வானத்தில் உயரே இருக்கிறது அந்த இரகசியம் நமது சகஸ்ராரத்தில் உயரே இருக்கிறது. உயர்வுள்ளல். கண்டவர் விண்டிலர். விண்டவர் கண்டிலர். அண்டத்தில் உள்ளதே பிண்டம். பிண்டத்தில் உள்ளதே அண்டம். அதனால் தான் சொல்கிறார்கள்இ ' எண்ணம் போல் வாழ்வு ' என்று.

'நாம் எதை விதைக்கிறோமோ அப்படியே அதை அறுவடை செய்கிறோம்' என்று இயற்கையின் நியதி ( ஊழளஅஷ்உ டுயற) உரைக்கிறது. இதையே இயேசு பிரானும்இ ' எதை விதைத்தாயோ அதை அறுவடை செய்வாய்' என்று அழகாக கூறுவார். அதனால்தான் வள்ளுவரும் ' உள்ளுவதெல்லாம் உயர் உள்ளல்' என்று அழுத்தமாகக் கூறுகிறார். அந்த உயர் உள்ளல் நமது சகஸ்ராரத்தின் உயரே இருக்கிறது. உயர் என்ற சொல்லே நமக்கு உயர்வைக் கொண்டு வரும்.

எண்ணங்களை மாற்றினால் வாழ்க்கை மாறிவிடும் என்பார்கள் கண்ணுக்குத் தெரியாத விண்ணுலகத்தில் எண்ணமுடியாத விடயங்கள் பல கோடி நம்மைச் சுற்றிலும் உள்ள காற்று மண்டலத்தில் சக்திகள் அனைத்தும் இருக்கிறது. நாம் எண்ணும் எண்ணங்களை மனம் உள்வாங்கி கிரகித்து மீண்டும் அதனைச் செயல்படுத்த ஆழ்மனத்திற்கு அனுப்பி வைக்கிறது. இவை எல்லாம் நொடிப் பொழுதில் நடக்கும் இறைவனின் அறியப்படாத இரகசியங்கள். நம் எண்ணமும் கண்ணாடியும் ஒன்றுதான். கண்ணாடி நம் பிம்பத்தைப் பிரதிபலிக்கிறது. அதேபோலத்தான் நம் எண்ணமும் வாழ்க்கையும் நம் எண்ணம் நன்றாக இருக்கும் போது வாழ்க்கையும் நன்றாகவே அமைகிறது. இதை நம்பி வாழ்வோர்க்கு அந்த நம்பிக்கையே பெருந்துணையாகிறது.

'தீதும் நன்றும் பிறர்தரவாரா!' துன்பம் வரும்போதெல்லாம் பிறரையோ அல்லது தன்னையோ நொந்துகொள்வதைத் தவிர்த்து எங்கு எப்போது செய்த வினையின் பலனை இப்போது அனுபவிக்குறோம் என்பதை யோசிக்க வேண்டும். அதை சரிசெய்ய முயலவேண்டும். முடியவில்லை எனில் அதன் போக்கில் அதை விட்டுவிட்டு தன்போக்கில் செல்லவும்;. காலம் எதையும் மாற்றக்கூடியது: எந்த பிரச்சினையையும் மாற்றவல்ல சக்தி கொண்டது.

கடந்த காலத்தில் வாழ்வது எந்தவித பயனும் அளிக்கப்போவதில்லை. அது நம்மிலும் மேலும் மேலும் எதிர்மறை எண்ணங்களைத்தான் தோற்றுவிக்கும். நம் எதிர்காலமும் அது போலவே அமையும். ஆகவே ஒரு மகிழ்வான எதிர்காலம் அமையஇ நம்முடைய இன்றைய நிலை மிகவும் முக்கியமானதாக ஆகிறது. இன்று நம் மனதில் முதன்மையாக நேர்மறை எண்ணங்களுடன் ஒரு மகிழ்வான மனநிலையில் வாழ்ந்தால்இ அதே போன்ற ஒரு எதிர்காலத்தை உருவாக்குகிறோம். எண்ணிய எண்ணியாங்கு: எண்ணங்களே செயலைத் தீர்மானிக்கின்றன. எண்ணங்களுக்கு வலிமை உண்டு. அதனால் தான் எண்ணம் போல வாழ்வு என்றும்இ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய் என்பதும் இந்த வாழ்வில் வலிமை வாய்ந்த வார்த்தைகளாகவே கூறப்பட்டு வருகிறது. ஆனால் இந்த எண்ணங்களை நாம் எப்படி கையாளுகிறோம் என்பதிலேயே வாழ்வின் சூட்சுமம் அடங்கி உள்ளது. உள்ளத்தனையது உயர்வாக வேண்டுமெனில் உயர்ந்த எண்ணங்களை எண்ண வேண்டும்.

ஆடம்பரமாக வாழ்வதுதான் வாழ்க்கை என்ற வகையில் மக்களின் எண்ணங்கள் மாறி வருவதால் கொலைஇ கொள்ளைஇ வன்முறை அதிகரித்து வருகின்றன. மகாபாரதத்தில் கர்ணனின் இறப்பு தற்செயலாக நடந்தது அல்லஇ மாறாக கர்ணன் ஏற்கனவே போட்ட எண்ணத்தின் விளைவுதான் அந்நிலைக்குக் காரணம் என அறியப்படுகிறது; ஆகஇ இந்த மண்ணுலகில் யாராக இருந்தாலும் சரி எண்ணங்களே நம் வாழ்க்கையை அமைக்கின்றன. எண்ணத்தின் வலிமையே நம் வாழ்வின் தரம்இ உயர்வு எல்லாம் உலகை வெல்வதற்கு முன் தன்னை வெல்ல வேண்டும். என்று சொன்னதும் இதற்காகத்தான் தன்னை என்பது நாம் எண்ணும் எண்ணங்கனே!.

உலகின் மிகச் சிறந்த வைரம் நம்மிடம் தோன்றும் எண்ணங்களே.... எங்கு பார்த்தாலும் மனித மனங்களில் ஏதேதோ எண்ணங்கள் பார்க்கும் மனித முகங்கள் எல்லாம் சிந்தனைவயப்பட்டதாகவே தோன்றுகிறது. இறுக்கமான மனிதர்களாகவும்இ இயந்திர கதியான மனிதர்களாகவுமே தென்படுகின்றனர். எண்ணக்குவியல்களின் கலவைகளையும்இ சிந்தனை ரேகைகளையும் கொண்ட மக்கள் கூட்டத்தை காணும் திசையெல்லாம் பார்க்க முடிகிறது; சக மனிதனைக் கண்டு மகிழும் உள்ளமோஇ இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளுதலோ இல்லாமல் தனயொரு உலகில் மாறிவிட்டது. இதற்கெல்லாம் அடிப்படை யாதென்று சிந்தித்தால் அவரவர்க்கான தனிப்பட்ட எண்ணங்களே ஆகும். எண்ண ஓட்டங்கள் தவறாக இருக்கும் போது அங்கே வாழ்வியல் நெறிகளில் மாற்றம் ஏற்படுகிறது. மனித நடத்தை மாறுபாடுகளை மாற்றி அமைக்கும் வல்லமை எண்ணங்களுக்கே உண்டு என்பதை மறுப்பதற்கில்லை.

**தெய்வேந்திரம் வஜிதா**
**ஆசிரியர்**
**யாழ்/கொழும்புத்துறை ஆத்திப்புலம் சந்திரசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை**

# நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய திருவிழா தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல்!

நயினாதீவு ஸ்ரீநாக பூசணி அம்மன் ஆலயத் திருவிழா தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழா எதிர்வரும் 2024.06.07 தொடக்கம் 2024.06.22 வரை நடைபெறவுள்ளதோடு அனைத்து பக்தர்களும் சிறப்பான முறையில் எந்தவித இடையூறும் இல்லாமல் ஸ்ரீநாக பூசணி அம்பாளை தரிசிப்பதை உறுதிப்படுத்தும் வகையில் இந்தக் கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் திருவிழாக் காலங்களில் வழமைபோல் யாழ் பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து குறிகாட்டுவான் வரையிலான இலங்கை போக்குவரத்து சேவை மற்றும் தனியார் பஸ் சேவைகளின் ஒருவழிக் கட்டணம் 187 ரூபா என தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை குறிகாட்டுவானில் இருந்து ஆலயம் செல்வதற்கான படகு போக்குவரத்து ஒரு வழிக் கட்டணம் 80 ரூபா எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு கடற்போக்குவரத்து (படகு) நேரத்திற்கமைய தனியார் போக்குவரத்து மற்றும் இலங்கை போக்குவரத்து பஸ் சேவை காலை 6.00 மணி தொடக்கம் மாலை 7.30 மணிவரையிலும் நடைபெறவுள்ளது.

கடற்போக்குவரத்தில் ஈடுபடும் படகுகள், படகுகளை உரியமுறையில் பேணுவதுடன் படகில் ஏற்றிச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துதல் மற்றும் பயணிகளுக்குரிய வசதிகள் இல்லாத படகுகளை சேவையில் ஈடுபடுவதை தவிர்த்தல் வேண்டும்.

ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள கள் விற்பனை நிலையம் திருவிழாக்காலத்தில் பூட்டப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் திருடர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸ் உத்தியோகத்தர்களை பாதுகாப்பில் ஈடுபடுத்தலுடன் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த பிரதேச சபையால் அடையாள அட்டைகள் வழங்கப்படுதல் வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டது.

அத்தோடு குறிகாட்டுவான் வீதி குன்றும் குழியுமாக உள்ளமையினால் அதனை சீர்செய்வது தொடர்பாகவும், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை, பொலிஸ் பாதுகாப்பு, கடற்போக்குவரத்தில் பாதுகாப்பு அங்கிகளை அணிவதை உறுதிப்படுத்தல், பாடசாலை மாணவர்களின் சாரணர் தொண்டர் சேவை, தரை மற்றும் கடற்போக்குவரத்து நேர அட்டவணையை காட்சிப்படுத்தல், மின் இணைப்பு, யாசகம் பெறுவோர் உள்வருவதை கட்டுப்படுத்தல், நடமாடும் வைத்திய சேவை, சுகாதாரம் மற்றும் குடிநீர் தேவை, மின்சாரத்தேவை, அமுதசுரபி அன்னதான ஒழுங்குகள், அம்புலன்ஸ் சேவை மற்றும் புனரமைக்கவேண்டிய வீதிகள் உள்ளிட்ட விடயங்கள் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகன், உதவி மாவட்டச் செயலாளர் உ. தர்சினி, பிராந்திய வைத்திய அதிகாரி கேதீஸ்வரன், அறங்காவலர் சபைத் தலைவர் (நாகபூசணி அம்மன் ஆலயம்) பரமலிங்கம் மற்றும் பிரதேச செயலாளர் (வேலணை), சுகாதாரத் துறைசார் பங்குதாரர்கள், இலங்கை போக்குவரத்து சபை உத்தியோகத்தர்கள், கடற்படை அதிகாரிகள், பொலிஸ் தரப்பினர், பிரதேசசபை பங்குதாரர்கள், துறை சார் திணைக்கள தலைவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டிருந்தார்கள்.

(05)

# கோணேஸ்வர ஆலய வழக்கு தொடர்பாக முகநூலில் விமர்சனங்களை முன்வைத்தவருக்கு அழைப்பாணை

திருகோணமலை மாவட்ட நீதிமன்றால் கோணேஸ்வர ஆலய வழக்கு தொடர்பாக முகநூலில் விமர்சனங்களை முன்வைத்த நபர் ஒருவருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு 8ஆம் இலக்க நீதிமன்ற நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டத்தின்கீழ் சுந்தரலிங்கம் சிவசங்கரன் என்பவருக்கு எதிராக புதன்கிழமை திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கை பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி நாகராஜா மோகன் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனுவை ஆதரித்து சிரேஷ்ட சட்டத்தரணி இராமலிங்கம் திருக்குமாரநாதன் சமர்ப்பணம் செய்திருந்தார்.

சிரேஷ்ட சட்டத்தரணியுடன் கனிஷ்ட சட்டத்தரணி திருமதி சி.சண்முகியும் மனுதாரர் சார்பாக இவ்வழக்கில் ஆஜராகியிருந்தார்.

கோணேஸ்வர ஆலயம் தொடர்பாக நீதிமன்றில் வழக்குஇடம்பெற்றுவருகின்ற நிலையில் குறித்த எதிராளி, குறித்த வழக்கைத் தாக்கல் செய்தவர்களையும், குறித்த வழக்கில் ஆஜராகியுள்ள சட்டத்தரணிகளையும் விமர்சித்திருக்கின்றார்.

இது 2024ஆம் ஆண்டு 8ஆம் இலக்க நீதிமன்ற நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டத்தின்கீழ் குற்றச்செயலாகும் எனவும் அது தொடர்பான ஆதாரங்களை சமர்ப்பித்து குறித்த எதிராளிக்கு நீதிமன்றானது அழைப்பாணையை அனுப்புவதற்கான கட்டளையை ஆக்கும் படியாகவும் மேலும் குறித்த அழைப்பாணையானது நீதிமன்ற பிஸ்கால் மூலமும், பதிவுத்தபால் மூலமும் அனுப்பும்படியான கட்டளையை ஆக்கும் படியாகவும் வழக்காளிகள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகளால் மன்றில் கோரப்பட்டது.

குறித்த சமர்ப்பணத்தை மன்று ஏற்றுக் கொண்டு குறித்த எதிராளிக்கு அழைப்பாஷ்ணை அனுப்பும்படி மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா பதிவாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சட்டத்தின் கீழ் ஆள் அடையாளம் உறுதிப்படுத்தப்பட்ட முகநூல் பாவனையாளருக்கு எதிராகத் திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட முதலாவது வழக்கு இது என்பது குறிப்பிடத்தக்கது.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# மார்ச் 12 இயக்கத்தின் மக்கள் மேடை மே 29!

## அம்பாறை மாவட்ட இணைப்பாளர் சத்தியநாதன் ஏற்பாடு



(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட மார்ச் 12 இயக்கத்தின் 'மக்கள் மேடை' நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காரைதீவில் நடைபெறவுள்ளது.

தூய்மையான அரசியலுக்காக செயல்படும் மார்ச் 12 இயக்கத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் கந்தையா சத்தியநாதன் தலைமையில் இந் நிகழ்வு காரைதீவு பாபா றோயல்ஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கென மாவட்டத்தில் உள்ள அரசியல் பிரமுகர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். கிராம ரீதியாக மூவர் இந் நிகழ்வில் கலந்து கொள்ள அனுமதிக்கிறது.

நாம் எமது வாக்குகளை அறிவு பூர்வமாக பயன்படுத்த வேண்டும். தகுதியானவர்களைமாத்திரமே நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்து அனுப்ப வேண்டும். இதுவே எமது தலையான கடமையாகும் என்று

மார்ச் 12 இயக்கத்தின் அம்பாறை மாவட்டக்கிளை அறிவித்துள்ளது.

இணைப்பாளர் சத்தியநாதன்தெரிவிக்கையில்-

எதிர்வரும் ஒக்ரோபர் 16 ஆம் திகதி சகல தேர்தல் அதிகாரங்களும் தேர்தல் ஆணையகத்திடம் செல்கின்றன.அதன் பின்பு நாடாளு மன்றமோ அல்லது ஜனாதிபதியோ தேர்தலில் தலையிடும் அதிகாரம் இருக்காது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் ஜனாதிபதி தேர்தல் வைத்தே ஆகவேண்டும். எனவே மக்கள் விழிப்படைய வேண்டும்.

நிதியின்மை போன்ற காரணங் களை காட்டி உள்ளூராட்சி தேர்தல் பின்போடப்பட்டது. இருந்தபோதிலும் எதிர்வரும் ஒக்ரோபரில் தேர்தல் நடத்தியாக வேண்டும்.

மார்ச் 12 இயக்கத்தின் குறிக்கோளின் படி எட்டு தகுதிகள் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வேட்பாளருக்கு இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த எட்டு தகுதிகளும் இருக்கின்றவர்களுக்கு தான் வேட்புமனு தாக்கல் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். கட்சிகளும் அனுமதி அளிக்க வேண்டும்.

தரமானபிரதிநிதியைதெரிவு செய்கின்றஉரிமைமக்களுக்கு இருக்கிறது. நாடாளுமன்ற தேர்தல் எடுக்கின்ற முடிவு அடிப்படையில் நாட்டின் கிராமத்தின் மற்றும் உங்களது நகரத்தின் எதிர்காலமும் உங்களது பிள்ளைகளின் எதிர்காலமும் தங்கி உள்ளது. - என்றார்.(05)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.05.2024இல் வெளியிடப்பெற்றது